**மே - 20**

# தேசியச் செய்திகள்

## சமர்த் திட்டம்

- சமர்த் திட்டத்தினைப் (Samarth scheme) பற்றியும், அதனுடைய வழிகாட்டுதல்களைப் பற்றியும் சமர்த் திட்டத்தின் பங்குதாரர்கள் அறிந்து கொள்வதற்காக புதுதில்லியில் திறன் இந்தியா திட்டத்தின் (Skill India Mission) கீழ், சமர்த் திட்டத்தினுடைய பங்குதாரர்கள் சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.
- சமர்த் திட்டமானது ஜவுளித் துறையில் உள்ள பங்குதாரர்களின் திறன்களை கட்டமைப்பதற்கான (Capacity Building Scheme) திட்டமாகும்.
- இந்த சந்திப்பிற்கு மத்திய ஜவுளித் துறை அமைச்சர் ஸ்மிரிதி இராணி தலைமை தாங்கினார்.
- மத்திய ஜவுளித் துறை அமைச்சகத்தினுடைய (Ministry of Textiles) இந்த சமர்த் திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒப்புதலினை வழங்கியது.
- நூற்பு மற்றும் நெசவு ஆகியவற்றைத் தவிர்த்து (spinning and weaving), ஜவுளித் துறையினுடைய முழு மதிப்புச் சங்கிலியையும் (entire value chain of textiles) உள்ளடக்கி, ஜவுளித் துறையில் இலாபகரமான மற்றும் நீடித்த வேலைவாய்ப்பிற்காக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை வழங்குவதே இத்திட்டத்தின் பரந்த நோக்கமாகும்.

## தேசிய நீர் தகவலியல் மையம்

- விரிவான நீர் மூல ஆதாரங்களின் தரவினைப் பராமரிப்பதற்காக மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகமானது (Ministry of Water Resources, River Development and Ganga Rejuvenation) தேசிய நீர் தகவலியல் மையம் (National Water Informatics Centre-NWIC) எனும் ஓர் மத்திய அமைப்பை நிறுவியுள்ளது.



- மத்திய நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகத்தின் கீழ் ஓர் துணை அலுவலகமாக (subordinate office) தேசிய நீர் தகவலியல் மையம் செயல்படும்.
- இணைச் செயலாளர் அளவிலான அதிகாரி இந்த அமைப்பின் தலைவராவார்.

- புவியியல் தகவல் அமைப்பு (geographic information system) இணையமேடையின் மீது இணையம் அடிப்படையிலான இந்தியாவின் நீர் மூல ஆதார தகவல் அமைப்பின் {India Water Resources Information System (India-WRIS)} மூலம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள் (classified data) தவிர்த்து, நாட்டின் நீர் குறித்த இன்றளவிலான (upto date) மற்றும் நம்பகமான தரவுகள் மற்றும் தகவல்களை அனைத்து குடிமக்களுக்கு தெரிவிப்பதும், அவர்களை அதிகாரப்படுத்துவதும் இதன் நோக்கங்களாகும்.

## ஆற்றலுக்கான இந்தியாவின் முதல் ஆலோசனை மையம்

- இங்கிலாந்து அரசினுடைய உதவியுடன் கான்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகமானது (Indian Institute of Technology -IIT) இந்தியாவின் முதல் எரிபொருள் ஒழுங்குமுறை மையத்தை (Centre for Energy Regulation-CER) துவங்கியுள்ளது.
- ஆற்றல் ஒழுங்குமுறைக்கான இந்தியாவின் இத்தகு முதல் வகையிலான இம்மையத்தின் நோக்கமானது ஆற்றல் மற்றும் எரிபொருள் துறையில், கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்கள் மீது சுதந்திரமாக ஆலோசனை வழங்குவதே ஆகும்.
- இம்மையமானது இந்தியாவின் ஆற்றல் துறையில் ஒழுங்குமுறை ஆராய்ச்சியினை (regulatory research) மேம்படுத்துவதற்காக IIT கான்பூரின் தொழிற்துறை மற்றும் பொறியியல் துறையினால் (Department of Industrial and Management Engineering) தொடங்கப்பட்ட ஓர் துவக்கமாகும்.
- இந்த எரிபொருள் ஒழுங்குமுறை மையம் மற்றும் அதனுடைய அடையாளம் காணப்பட்ட செயல்பாடுகளுக்கு இங்கிலாந்து அரசின் சர்வதேச மேம்பாட்டிற்கான துறை (Department for International Development-DfID) நிதியினை வழங்கும்.

## கிஷன்கங்கா நீர்மின் உற்பத்தித் திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடி 300 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட கிஷன்கங்கா நீர்மின் ஆற்றல் உற்பத்தி திட்டத்தை (Kishanganga Hydroelectric Project) ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பந்திபோரா மாவட்டத்தில் துவக்கி வைத்துள்ளார்.
- மேலும் பிரதமர் 1000 மெகாவாட் மின்உற்பத்தித் திறன் கொண்ட பகல் துல் ஆற்றல் உற்பத்தி திட்டத்திற்கும் (Pakal Dul Power Project) அடிக்கல்லை நாட்டியுள்ளார்.
- பகல் துல் அணையானது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கிஷ்த்வார் மாவட்டத்தில் செனாப் நதியின் (Chenab River) துணை நதியான மருசதார் நதியின் (Marusadar River) மீது கட்டப்படுவதற்காக முன்மொழியப்பட்டுள்ள கான்கிரிட் முகப்புடைய பாறைக் கட்டமைவு உடைய அணையாகும் (Concrete-face rock-fill dam-CFRD).
- இந்த 1000 மெகாவாட் மின் உற்பத்தித் திட்டமானது கட்டமைக்கப்பட்டால் இதுவே ஜம்மு காஷ்மீரின் மிகப்பெரிய நீர்மின் உற்பத்தி திட்டமாகும். மேலும் இதுவே ஜம்மு காஷ்மீரின் மின் உற்பத்திக்கான முதல் நீர் சேகரிப்புத் திட்டமாகும்.



- கிஷன்கங்கா நீர்மின் உற்பத்தித் திட்டமானது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பந்திபோரா மாவட்டத்தில் ஜீலம் நதிப் படுகையில் கிஷன்கங்கா நதியின் மீது கட்டப்பட்டுள்ள ஓர் 37 மீட்டர் உயர காங்கிரிட் முகப்புடைய பாறைக் கட்டமைவு உடைய அணையாகும்.

## காவிரி மேலாண்மைத் திட்டம்

- தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய நான்கு தென்னிந்திய காவிரி ஆற்றுப் படுகை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்திற்கு இடையேயான சச்சரவுகளற்ற நதிநீர் பங்கீடு மற்றும் விநியோகத்திற்கான மத்திய அரசின் காவிரி மேலாண்மை திட்ட வரைவிற்கு (Draft Cauvery Management Scheme) உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
- உச்சநீதி மன்றமானது 2007 ஆம் ஆண்டின் காவிரி நதி நீர் பிரச்சனைகளுக்கான தீர்ப்பாயத்தின் (Cauvery Water Disputes Tribunal-CWDT) தீர்ப்பினை மாற்றம் செய்துள்ளது. மேலும் எந்த ஒரு களத்தின் அடிப்படையிலும் இத்திட்டத்தின் அமல்பாட்டிற்கான கால அவகாசத்தை உச்ச நீதி மன்றம் நீட்டிக்காது என்பதையும் உச்ச நீதி மன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.
- இத்திட்டமானது கர்நாடகா, புதுச்சேரி, தமிழ்நாடு, கேரளா ஆகியவற்றிற்கிடையே காவிரி நீரைப் பகிர்ந்தளிப்பது தொடர்பானதாகும்.
- இத்திட்டமானது காவிரி மேலாண்மை ஆணையத்தால் (Cauvery Management Authority-CMA) செயல்படுத்தப்படும். மேலும் இந்த காவிரி மேலாண்மை ஆணையமானது உச்ச நீதி மன்றத்தால் மாற்றம் செய்யப்பட்டவாறு காவிரி நதி நீர் பிரச்சனை தீர்ப்பாயத்தின் தீர்ப்பை அமல்படுத்தும் ஒரே அமைப்பாகும் (sole body).
- நிர்வாக ஆலாசனைகளை (administrative advisories) வழங்குவதைத் தவிர, இத்திட்டத்தின் அமல்பாட்டில் மத்திய அரசுக்கு எவ்வித பங்கும் இல்லை.

## புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் - புரிந்துணர்வு ஒப்பந்தம்

- புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் துறையில் (Renewable Energy) இந்தியா மற்றும் பெரு நாடுகளுக்கிடையே ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

- இந்த ஒப்பந்தமானது கவுதமாலா (Guatemala), பனாமா (Panama), பெரு (Peru) ஆகிய மூன்று மத்திய அமெரிக்க நாடுகளுக்கான துணைக் குடியரசுத் தலைவரின் முதல் பயணத்தொடரில் பெரு நாட்டிற்கான கடைசிப் பயணத்தின் போது கையெழுத்திடப்பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு-அவசரகால மாநாடு

- காஸா பகுதியில் (Gaza Strip) பாலஸ்தீனிய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான இஸ்ரேலின் அண்மைய வன்முறையினைப் பற்றி விவாதிப்பதற்காக துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் 57 உறுப்பினர்களைக் கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு (Organization of Islamic Cooperation -OIC) அண்மையில் நடைபெற்றது.




- துருக்கி அதிபர் ரிசெப் தய்யீம் எர்போகனின் அழைப்பினைத் தொடர்ந்து இம்மாநாடு நடத்தப்பட்டது.
- இந்த மாநாட்டில் இஸ்ரேலிய படையினால் மேற்கொள்ளப்பட்ட அமைதிவழியிலான பாலஸ்தீனிய பொதுமக்கள் ஆர்ப்பாட்டக்காரர்களின் படுகொலைக்கு (massacre) கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சுற்றுச்சூழலுக்கு உகந்த உந்து பொருள்

- விண்கலன்கள் மற்றும் செயற்கைக் கோள்களுக்கு ஆற்றல் அளிப்பதற்காக ஹைட்ராக்ஸில் அம்மோனியம் நைட்ரேட்டை (Hydroxyl ammonium nitrate- HAN) அடிப்படையாகக் கொண்ட சுற்றுச்சூழலுக்கு உகந்த உந்து எரிபொருள் கலவையை (Environment-friendly propellant blend) இஸ்ரோவின் திரவ உந்து எரிபொருள் அமைப்பு மையத்தின் (Liquid Propulsion Systems Centre-LPSC) ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி வருகின்றனர்.



- இந்த ஹைட்ராக்ஸில் அம்மோனியம் நைட்ரேட் அடிப்படையிலான ஒற்றை உந்து எரிபொருளானது (monopropellant) வழக்கமான ஹைட்ரஜன் ராக்கெட் எரிபொருள்களை பதில்மாற்றம் செய்யும். ஏனெனில் அவை மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்த புற்று நோயை உண்டாக்கும் (carcinogenic) காரணிகள் உள்ள இராசாயனமாகும்.
- ஒற்றை உந்து எரிபொருள் (Monopropellant) என்பது தனியே ஆக்ஸிஜனூக்கி (oxidizer) தேவைப்படாத ஓர் வேதியியற் உந்து எரிபொருளாகும்.
- இவை செயற்கைக் கோள்களின் சுற்றுவட்டப் பாதைகளின் திருத்தத்திற்காக (orbital correction) செயற்கைக் கோள் பீற்றுவிசைக் கட்டுப்படுத்திகளில் (thrusters) பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

## அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப கலைச் சொற்களுக்கான குழு -ஆயுஷ்

- அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப பயன்பாட்டு நோக்கத்திற்காக, மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் (Ministry of AYUSH) முன்மொழிவினைத் தொடர்ந்து அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப கலைச் சொற்களுக்கான குழுவானது (Commission for Scientific and Technical Terminology-CSTT) ஆயுஷ் (AYUSH') எனும் வார்த்தையை இந்தி மற்றும் ஆங்கில மொழியில் ஏற்றுக் கொண்டுள்ளது.
- "ஹோமியோபதி, சோவா ரிக்பா, சித்தா, யுனானி, நேச்சுரோபதி, யோகா, ஆயுர்வேதா ஆகியவற்றை உள்ளடக்கிய குணப்படுத்துதல் மற்றும் உடல் நலத்திற்கான பாரம்பரிய மற்றும் பயன்பாட்டு வழக்கமல்லாத மருத்துவ முறை" எனும் பொருளோடு (Traditional and Non-Conventional Systems of Health Care and Healing which include Ayurveda, Yoga, Naturopathy, Unani, Siddha, Sowa Rigpa, Homoeopathy etc") ஆயுஷ் எனும் வார்த்தையை அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப கலைச் சொற்களுக்கான குழு அங்கீகரித்துள்ளது.
- இதன் மூலம் இந்த வார்த்தையானது அதிகாரப்பூர்வ முறையில் அனைத்து அரசு தொடர்புகளிலும் பயன்படுத்தப்படும். அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப கலைச் சொற்களுக்கான குழுவானது 1960 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமைக்கப்பட்டது. இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.
- இந்தி மற்றும் அனைத்து இந்திய மொழிகளிலும், அறிவியல் பூர்வ மற்றும் தொழில் நுட்ப சொற்களை வரையறுத்தலை நோக்கமாகக் கொண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 344(4) -னுடைய கூறின் கீழ் இந்திய அரசின் தீர்மானத்தின் மூலம் அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப கலைச் சொற்களுக்கான குழு உருவாக்கப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## திறன் மேம்பாட்டு மையம்

- ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட அமைப்பானது (United Nations Development Programme-UNDP), தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத் நகரில் நம்பிக்கை வேண்டியோருக்கான திறன் மேம்பாட்டு மையம் (Skill development centre for clients of Bharosa) எனும் பாதிக்கப்பட்ட துயருடைய பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஒருங்கிணைப்பு ஆதரவு மையத்தை துவங்க உள்ளது.
- பாதிக்கப்பட்ட (vulnerable) மற்றும் நலிவு நிலை பெண்களுக்கு (marginalised women) திறன் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரமளிப்பதே இத்தொடக்கத்தின் நோக்கமாகும்.
- திஷா திட்டத்தின் (Disha project) கீழ் ஹைதராபாத் காவல்துறை மற்றும் ஐநா வளர்ச்சி திட்ட அமைப்பு ஆகியவற்றிற்கிடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் வழியே இந்த மையம் அமைக்கப்பட உள்ளது.
- பரோசா (நம்பிக்கை) என்பது 2016 ஆம் ஆண்டு ஹைதராபாத் நகர காவல்துறையால் துவங்கப்பட்ட ஓர் தொடக்கமாகும். வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவினை வழங்கும் ஓர் நடப்பு நிலை வசதிகளினைக் (state-of-the-art centre) கொண்ட மையமே பரோசா மையமாகும்.

# விளையாட்டுச் செய்திகள்

## பிபா U-20 பெண்கள் உலகக் கோப்பை

- பிரான்ஸ் நாட்டில் நடைபெற உள்ள 20 வயதுக்குட்பட்டோருக்கான பெண்கள் பிபா உலகக் கோப்பைக் கால்பந்துப் (FIFA U-20 Women's World Cup) போட்டியில் துணை நடுவராக அதிகாரப்பூர்வ முறையில் பொறுப்பேற்றுப் பணியாற்ற இந்தியாவைச் சேர்ந்த உவெனா பெர்னான்டஸ் (Uvena Fernandes) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



- 2016-ஆம் ஆண்டு ஜோர்டானில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான பிபா உலகக் கோப்பை போட்டியில் (U-17 Women's World Cup), துணை நடுவராக அதிகாரப்பூர்வ முறையில் பொறுப்பேற்றுப் பணியாற்றிட தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய பெண் துணைக் கால்பந்து நடுவர் இவரேயாவார்.
- இதுவரை இவர் நான்கு போட்டிகளுக்கு துணை நடுவராக பணியாற்றியுள்ளார்.
- 2016-ஆம் ஆண்டு ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் சிறப்பு விருது (Asian Football Confederation Referees Special Award) இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## U-16 சர்வதேச கால்பந்து தொடர்

- செர்பியாவில் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில், இந்தியாவின் 16 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய கால்பந்து அணியானது தஜிகிஸ்தானை வீழ்த்தி நான்கு நாடுகளுக்கிடையேயான கால்பந்து போட்டித் தொடரின் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளது.
- இந்த நான்கு நாடுகளுக்கிடையேயான கால்பந்து தொடரில் நான்கு நாடுகளைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்டோருக்கான தேசிய கால்பந்து அணிகள் பங்குபெற்றன. அவையாவன-இந்தியா, தஜிகிஸ்தான், செர்பியா மற்றும் ஜோர்டான் ஆகியனவாகும்.

- - - - - - - - - - - - - - -